தினமலர்
சென்னை | ஜூலை 15, 2011

அங்காடி தெரு

# நம் கலையை காப்பாற்றுங்கள்

ஸ்தபதி தட்சிணாமூர்த்தி



தொழில் கற்றுக் கொடுத்த தந்தையின் படைப்புக்கும், சாஸ்திரம் சொல்லிக் கொடுத்த தாய்மாமனின் படைப்புக்கும் நடுவில் தட்சிணாமூர்த்தி.

“கிழக்கு கடற்கரை சாலை... நீலாங்கரை ‘ஹாட் சிப்ஸ்’ எதிர்ல இருக்கற கஜீரா கார்டன்ல என் வீடு. நாளைக்கு காலையில உங்களுக்காக நான் காத்துக்கிட்டிருப்பேன்!'' - மிகச்சரியாக 10 மணிக்கு, ஸ்தபதி சொன்ன முகவரியில் நின்றோம். வீடல்ல அது...! பிரம்மாண்டமான இரண்டு தள ஆலயம்! பார்ப்பவரை பரவசப்படுத்தும் கலைநயமிக்க கோவில். உளிகளால் சிலை செதுக்கும் சிற்பிகள் மத்தியில், தன் உயிர்கொண்டு சிலை வடிக்கும் ஸ்தபதி தட்சிணாமூர்த்தி, கீழ்த்தளத்தை தன் உயிருக்கு நிகரான உறவுகள் வாழ ஒதுக்கியிருக்கிறார். மேல்தளத்தை தன் உயிரினும் மேலான தொழில் வாழ ஒதுக்கியிருக்கிறார். ‘‘சிமெண்ட், செங்கலால கட்டப்படறது கட்டிடம். ஆன்மாவால கட்டப்படறது கோவில். ஆனா, எல்லா கட்டிடமுமே கோவிலா இருக்கணுங்கறது என் ஆசை. அப்படி இருந்துட்டா நல்லா இருக்கும் இல்லையா!'' மரபு சார்ந்த கட்டிடக்கலை மீதும், சிற்பக்கலை மீதும் ஸ்தபதி கொண்டிருக்கும் ஈடுபாட்டை அள்ளித்தெளிக்கின்றன... அடி மனதின் ஆழத்தில் இருந்து வரும் வார்த்தைகள்...

### 25 ஆண்டுகளுக்கும் மேலாக...

இந்தியா மட்டுமல்லாது, வெளிநாடுகளிலும் சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக, சிற்பம் மற்றும் ஆலய கட்டுமான துறையில் ஈடுபட்டு வருபவர் தட்சிணாமூர்த்தி. குமரிமுனையில் கம்பீரமாக நிற்கும் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபத்தினை உருவாக்கிய எஸ்.கே. ஆச்சாரி ஸ்தபதியின் மகன். உலக பொதுமறை நூல் கண்ட வள்ளுவனுக்கு 133 அடி உயரத்தில் சிலை செதுக்கிய கணபதி ஸ்தபதியின் மருமகன். விஸ்வகர்மீயம், மயமதம் உள்ளிட்ட சிற்ப நூல்களில் தேர்ச்சி பெற்ற ஸ்தபதி. சிற்ப சூடாமணி, சிற்ப கலாரத்னம் உள்ளிட்ட எண்ணற்ற விருதுகளால் கவுரவிக்கப்பட்ட கலைஞன். மரபுரீதியான கலைகள் அழிந்து வருகிறதே! எனும் அர்த்தமுள்ள வேதனை கொண்ட தமிழன்.



### சிவனை விட கலையை வணங்க அதிகம் வருகிறார்கள்...

‘‘காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவிலுக்கு சிவனை வணங்க வர்றதை விட, கலையை வணங்க வர்ற பக்தர்கள்தான் அதிகம்!ன்னு சொல்வேன். அந்தளவுக்கு நம்ம கலைகள்ல விஷயம் இருக்கு. தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தை இன்னைக்கு பார்த்தாலும், ஒரு புதுமை தெரியுது. இது தான், நம்ம மரபு கலையோட சிறப்பு. ஆனா, இந்த பெருமைகளை நாம புரிஞ்சுக்கலை. அதனால தான், கலைநயமிக்க சிற்பங்கள் சேதமடைஞ்சா, ‘ஒருகொத்தனாரைவைச்சு சரி செஞ்சுடலாம்!'ன்னு நினைக்கறோம். அதைத்தான் செஞ்சுகிட்டும் இருக்கறோம். இன்னைக்கு வெளிநாட்டு கட்டிடக்கலைன்னு சொல்லப்படற அத்தனையுமே, நம்ம நாட்டு கலைகளை அடிப்படையா வைச்சு உருவானதுதான். இதையும் நாம உணரலை. அதுக்கு ஒரு சாட்சிதான், பிரம்மாண்ட பொருட்செலவுல மேற்கத்திய பாணியில கட்டப்பட்டிருக்கிற தலைமைச் செயலகம். (நீண்ட பெருமூச்சிற்கு பிறகு...) நம்மகிட்ட எல்லாமே இருக்குதுங்க!'' - ஸ்தபதியின் வார்த்தைகளில் வேதனை தெறிக்கிறது.

### தாய் குழந்தை சுமப்பது மாதிரி...

‘‘சிலைகளா இருந்தாலும் சரி, கட்டிடமா இருந்தாலும் சரி! அளவுகள் ரொம்ப முக்கியம். சிலைகளுக்கு தாள அளவுகள். ஒரு தாளம்ன்னு சொல்றது ஒரு முக அளவு. தச தாளம், நவ தாளம், பஞ்ச தாளம்ன்னு இதுல நிறைய வகைகள் இருக்கு. சிலைகள் சமநோக்கு பார்வையில தான் இருக்கணும். ஒருவேளை இந்த அளவுகள்ல தவறுகள் நடந்தா, நிச்சயம் கெட்டது நடக்கும். அதே மாதிரி, உணர மட்டுமே கூடிய இசையை, பார்க்க வைக்கும் ஆற்றல் கொண்டதா கட்டிடங்கள் கட்டப்படணும். வாஸ்துப்படி அறைகள் இருந்தா ரொம்ப நல்லது. இந்த வரைமுறைகளோட இருக்கற கட்டிடமும், சிலைகளும்... வாழ்றவங்களுக்கும், வழிபடுறவங்களுக்கும் நல்ல வாழ்க்கையை கொடுக்கும். இந்த அளவுகளை கத்துக்கொடுக்கற நூல்களை முறையா கற்றுத்தேர்ந்தவன் தான் ஸ்தபதி. அதனாலதான், அந்த காலத்துல ஒரு நகரம் எப்படி இருக்கணும்!ன்னு ஸ்தபதிகள் தீர்மானிச்சாங்க. எங்களோடது தொழில் இல்லைங்க; ஈடுபாடு! ஒரு தாய் தன் குழந்தையை சுமக்கற உணர்வோடு, அந்த ஈடுபாட்டோடு செய்ற கலை!''

### உயிர் இல்லாத உடலுக்கு என்ன மதிப்பு?

‘‘உணர்வுகளுக்குவடிவம்கொடுக்கறது சிற்பக்கலை. அதனாலதான், அரசர்களோட சிலைகளை, அவங்க குணநலன்கள் வெளிப்படுற மாதிரி வடிவமைச்சாங்க. இன்னைக்கு இருக்கற நவீன சிற்பங்களும், கட்டிடங்களும் அழகை வெளிப்படுத்தலாமே தவிர, ஆன்மாவை வெளிப்படுத்தறதில்லை. உயிர் இல்லாத உடலுக்குஎன்னங்க மதிப்பு? இதனாலதான் சொல்றேன்! உயிர் இழந்துட்டு வர்ற நம்ம மரபுக்கலைகளை காப்பாத்த வேண்டிய கட்டாயத்துல இப்போ நாம இருக்கறோம். முதல்கட்டமா, இந்த கலைகளை பத்தி இளைஞர்கள் அதிக அளவுல தெரிஞ்சுக்கணும். இதற்காக நிறைய கல்லூரிகள் உருவாக்கப்படணும். இனி கட்டப்படும் எந்த கட்டிடமும், நம் மரபை பறைசாற்றும் கட்டிமாகவே இருக்கணும். மரபுசார் கட்டிடக்கலை பற்றிய ஆராய்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் அரசு சார்பில் ஒரு தனி துறை உருவாக்கப்படணும். இதெல்லாம் நடந்தா நம்ம கலைகளும், பாரம்பரியமும் எவ்வளவு உயர்ந்ததுன்னு வருங்கால தலைமுறை நிச்சயம் உணரும். நம்மை வாழ்த்தும்!''

**மரபுக்கலைகளின் மீது கொண்டிருக்கும் தீராத காதல்...ஸ்தபதியின் கண்களிலும் மிளிர்கிறது.**

• துரைகோபால்

விவேக் மரபு கட்டிடக்கலை மையம், நீலாங்கரை. ✆ 99400 88401